உ

ஓம் முருகா



# நீர்வைக் கந்தன் தோத்திரம்

தொகுப்பு:

தவஸ்தானம் — பரிபாலன சபையார்

நீர்வேலி.

ஸ்ரீ [illegible] அச்சகம், யாழ்ப்பாணம்.



நீர்வைப் பிணி தீர்க்கும் முருகன்

உ

முருகன் துணை

# முகவுரை

"அருவமும் உருவ மாகி அனாதியாய்ப் பலவாய் யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய."

முருகன் பேரழகும் பெருவலிமையும் பெருங் கருணையும் கொண்டவன். அவன் ஒப்பற்ற சோதி வடிவினன். அவனுடைய சிறந்த திருநாமம், "அரும் பெறல் மரபில் பெரும் பெயர் முருக" எனப் பாராட்டுவர் நக்கீரர். முருகன் கலியுக வரதன்.

நீர்வேலியில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் பிணி தீர்க்கும் முருகன் என்பார்கள். அவன் யாவர் பிணியையும் தீர்க்க வல்லன். அப் பெருமானைப் பொருளாக வைத்துப் பாராட்டுபவர் பலர்.

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்களாலும், பிறராலும், "நீர்வைக் கந்தன் தோத்திரம்" என்னும் பெயரோடு இம் மலர் சமாதான நீதிபதி திரு. மு. பூபாலசிங்கம் அவர்களை யுள்ளிட்ட நீர்வேலிக் கந்தசுவாமி தேவஸ்தானப் பரிபாலன சபையாரின் ஆதரவோடு வெளிவருகிறது.

இம் மலரைப் பாராயணம் செய்யும் அன்பர்கள் முருகனின் திருவருளைப் பெற்று உய்வார்கள் எனபது திண்ணம்,

**உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்**
**பின்னை ஒருவரையான் பின்செல்லேன் — பன்னிருகைக்**
**கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்**
**வேலப்பா செந்திவாழ் வே."**

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

*இங்ஙனம்,*
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.**

உ

## நீர்வைக் கந்தன் தோத்திரம்

### வெண்பா

1. என்றும் இளையான் எவர்க்கும் மிகப்பெரியான்
என்றும் அழகியான் என்றைக்கும் — பொன்றலிலா
ஏர்சால் கருணையான் எம்மான் திருமுருகன்
நீர்வேலி நின்றான் நிறைந்து.

2. என்னை யடிமைகொண் டென்னிடரைப் போக்குவித்துத்
தன்னை மனத்திருத்தித் தாங்குகின்றான் — பொன்னின்
வடிவேலன் மஞ்ஞையெனும் வாகனத்தான் கந்தன்
கடியேறும் நீபவா கன்.

### விருத்தம்

3. ஞான வடிவேல் பிடித்தகுகன்
நயமார் வள்ளி தனைத்தேடி
கான மதிலும் மலைமேலும்
கடுகி யோடி நின்றபரன்
தேனும் மாவும் அவளளிக்கத்
தீஞ்சொல், ஊட்ட மகிழ்குமரன்
வானம் பொழியும் நீர்வேலி
வளர்ந்தான் வந்து பணியுமினே.

4. என்றும் குன்றாப் பேரழகன்
என்றும் மாறா இளமையினான்
என்றும் மங்காக் கருணையினான்
என்றும் தேயாப் பெரும்புகழான்
என்றும் எனக்குத் துணைவருவான்
என்றும் தமிழுக் கருளுபவன்
என்றும் குறையா இன்பத்தான்
இயல்நீர் வேலி இலங்கினனே.

5\. வண்ணம் சிவந்தான் வள்ளிக்காய்
வனத்தே நடந்து கால்சிவந்தான்
தண்ணென் கிரியை வேல்விடுத்துச்
சிதைத்துக் கமலக் கைசிவந்தான்
அண்ணல் சிவனுக் குபதேசம்
அறைந்தே எழிலார் வாய்சிவந்தான்
நண்ணும் இலங்கை நீர்வேலி
நயந்த முருகன் உடைசிவந்தான்.

6\. என்றும் இளையான் இணையில்லா
எழிலான் தன்னை நம்பியவர்
ஒன்றுங் குறையிங் கில்லாமல்
உவகையோடு வாழ வைக்கும்
குன்றம் அனைய கருணையினன்
குமரன் இலங்கை நீர்வேலி
துன்றும் கோயில் வாழ்கின்றான்
துதித்துப் பணிய வாருமினே.

7\. எண்ணும் மொழியும் எட்டாத
எம்மான் என்று மறைசொலவும்
பண்ணும் பாவும் கொண்டேத்திப்
பரவி நைந்து நைந்துருகும்
எண்ண முடையார்க் கெளிமையுற
வந்து கருணை பெய்முருகன்
நண்ணும் வயல்சேர் நீர்வேலி
நற் கோயிற்கண் நின்றானே.

## வேறு

8. கூர்வேலை எடுத்தருளிச் சூர்மார்பு துளைக்கவிடு
குமரன் றன்னை
சீர்வேலித் திருக்கோயி லெழுந்தருளும் பராபரனை
நினைப்போர் நெஞ்சத்
தூர்வேலை யுடையானை வள்ளிதெய்வ யானைமகிழ்
சோதி தன்னைச்
சோர்வேது மில்லாமல் துதிப்பதுவும் வணங்குவதும்
துன்பம் போக்கும்.

9 மலர்பூத்த திருமுகங்கள் ஆறும் சாந்த
மனம்பூத்த திருமார்பும் ஞானம் பூத்துப்
பொலியயிலும் வளர்மயிலும் நீர்வே லிக்கண்
புகுந்திறைஞ்சி முருகாவேற் கந்தா என்று
நிலவியமெய் யன்பினொடு துதிப்பார்க் கெல்லாம்
நிதியருளி நீதியொடு வாழும் நேர்மை
இலகவருள் எம்பெருமான் தன்னைப்போல
இஞ்ஞாலத் தொருகடவுள் உண்டோ உண்டோ,

10. முந்நூலும் தண்கடம்பும் புரள்கின்ற திருமார்பும்
மூளும் வீர
முந்நாலு திருத்தோளும் அறுமுகமும் புன்னகையும்
முன்னைப் பாசம்
மன்னுதை படிபார்வை தருவிழியும் திருமாலும்
வயங்கு தேவர்
மன்னுய இந்திரனும் தொழுமுருகன் திருவடியும்
மறவேன் யானே.

— கி. வா. ஜகந்நாதன்.

11. விண்ணவர்கள் துயர்போக்க விறலுடைய அவுணரை
வேலால் அழித்த தெய்வம்
வேதனைசெய் பிணிதீர்க்கும் முருகனெனும் பெயர்கொண்டு
வீற்றிருந் தருளு தெய்வம்
எண்ணுவார் எண்ணுவன இனிதாக ஈந்திடும்
இன்பவடி வான தெய்வம்
எக்காலும் தொழுமடியர் இதயமே கோயிலாய்
ஏற்றிருந் தொளிரு தெய்வம்
மண்ணவர்கள் ஏத்துநல் வளஞ்சாலு மீழத்து
வடபாக மான பதியாம்
மருவிடும் வாழைமுதல் நெற்பயிர்க ளோங்கிடும்
வண்மைசெறி நீர்வை தன்னில்
கண்ணுதற் கினியனுய்க் கார்வண்ணன் மருகனுய்க்
கந்தனுய் வந்த குமரா!
கல்விநிறை செல்வங்கள் கருணையால் உதவிடக்
காட்சிகொண் டருளு முருகா!

— பண்டிதர் சு. இராசையா.

## சிங்காரக் கந்தவேள்

### விருத்தம்

12. தலைமுற்ற ஞானியர் கணமுற் றறிந்திடும்
நந்திமுகற் கிளைய முருகா,
சரவணப் பொய்கைதனில் அறுமுகச் செல்வனுய்த்
தவழ்ந்தசிவ பால முருகா.
கவலைக் கடற்குளுறு சுரருக் கிரங்கிவரும்
கற்பகா னந்த முருகா,
கார்த்திகைப் பாலுண்டு கௌரிகைத் தழுவுண்டு
கந்தனுய் வந்த முருகா
பலமுற்ற அடியாரின் பந்தபா சந்தீரப்
பாரெலாம் நின்ற முருகா,

பாலனாய்க் குமரனாய்ப் பண்பான கிழவனாய்ப்
பலவடிவு கொண்ட முருகா,
சிவகுமர முருகாநின் திருவடியைச் சிறுமையேன்
சிந்திக்கும் திறமரு ளுவாய்
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப் பதிமேவு
சிங்காரக் கந்த வேளே.

13. கம்பா நதிக்கரையில் கண்ணுதலைப் பூசித்த
கன்னிஉமை தந்த செல்வம்
காவடிக் குழுவிலும் பாவிலும் நாவிலும்
கலையாகி நின்ற செல்வம்
ஐம்பூத மாகிவரு மணுவுக்கு ளணுவாகி
ஆதிமுத லான செல்வம்
ஆறான ஆதார பேறான தலைநின்ற
அதிசிகர மான செல்வம்
பைம்போது கொண்டுதினம் பாலித் திறைஞ்சுவார்
பக்தியில் கண்ட செல்வம்
பயனிலைக் கேற்றபடி படியளக்கும் செல்வம்
பண்பாக ஔவை பாடும்
செம்பாட் டுவந்ததனிச் செல்வமே அடியனேன்
சிற்றுரையும் கேட்டரு ளுவாய்
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப் பதிமேவு
சிங்காரக் கந்த வேளே.

14. கற்பகக் கந்தா கலாஜோதிக் கந்தாநற்
கைலேசன் தந்த கந்தா
கதிர்வேல் பிடித்துவரும் கந்தா கடப்பமலர்
கமழுமிசை பயிலுங் கந்தா
அற்புத சதானந்த ஆதிகந் தா அன்பர்
அரியதுணை யான கந்தா
ஆறுபடை மீதில்விளை யாடுங்கந் தாபாடும்
அருணகிரிக் கருளும் கந்தா

கற்புமணங் களவுமணப் பொற்பினைக் காட்டஇரு
கன்னிமணம் பூண்ட கந்தா
கருவினையுன் கழலினுற் கரையுமெனும் கருத்துணரக்
கமலனை யுதைத்த கந்தா
சிற்பர வியோகவெளி நின்றகந் தாநினது
சேவடி மலர்ச்சு கந்தா
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப் பதிமேவு
சிங்காரக் கந்த வேளே.

15. அப்பனே முருகனே ஆனந்த ரகுராமன்
அணைக்கின்ற திரு மருகனே
அகிலாண்ட கோடிகளை ஐந்தொழிற் குள்ளாக்கி
அசைய வைக்குங் குமரனே
ஒப்பரிய ஓர்கனிக் கோங்கார மயிலேறி
உலகம் பலமய மெனும்
உண்மையைக் காட்டிவரும் ஷண்முகா, கணபதிக்
குயர் அன்பு மிகு தம்பியே
எப்பொருளும் எக்கலையும் எவ்வுலகும் எத்தொழிலும்
எவ்வின்ப துன் பங்களும்
ஏகாந்த வாழ்வில்வரு யோகாந்தப் பழயென்ற
எழில்காட்டப் பழனி வந்தாய்
செப்பரிய பந்தப் பவக்கடலில் மூழ்காமல்
சிறியேமைக் காத்தரு ளுவாய்
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப் பதிமேவு
சிங்காரக் கந்த வேளே.

16 எத்தனை திட்டங்கள் எத்தனை பட்டங்கள்
எத்தனை உயர் பதவிகள்
எத்தனை வீடுகள் எத்தனை நாடுகள்
எத்தனை குல முறைமைகள்
எத்தனை வண்ணங்கள் எத்தனை எண்ணங்கள்
எத்தனை பயன் வளங்கள்

எத்தனை பெற்றவர்கள் எத்தனை உற்றவர்கள்
எத்தனை மனைவி மக்கள்
எத்தனை இருவினைகள் எத்தனை கருவினைகள்
எத்தனை தொழில் முறைகள்
எத்தனை விததுன்பம் எத்தனைவித இன்பம்
இவ்வுலகில் நுகர வைத்தாய்
சித்தனுக் கினியகுரு நாதனே தியானமொடு
திகழ்கின்ற தனிமை யருள்வாய்
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப் பதிமேவு
சிங்காரக் கந்த வேளே.

17. நீயே நயந்ததாய் நீயே யருட்டந்தை
நீயே நிறைந்த சுற்றம்
நீயே சுகப்பொருள், நீயே தவப்பயன்,
நீயே கனிந்த ஞானம்,
நீயே யுதித்தவே தாந்தசித் தாந்தத்தின்
நிறைசோதி முடிபு, நீயே
நெஞ்சப் புலத்திலே பஞ்சப் புலன்களை
நெடுவிளக் காக்கி வைப்போன்,
நீயே கலைத்துறைகள் தெள்ளித் தெளிந்தபொருள்,
நின்ற அண்டங்க ளெல்லாம்
நீயே நிலைத்த முதல், நீயே பரப்பிரமம்,
நீலமணிக் கண்ட னருளும்
சேயே! மனையத் துன்பொலிவு கண்டுகதி
தேடுமொரு நெறியரு ளுவாய்
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப் பதிமேவு
சிங்காரக் கந்த வேளே,

18 அருளுடைய குறுமுனிக் குபதேசம் செய்தவா
அல்லலுறு நக்கீரரின்
அருளாற்றுப் படைநயந் தாபத்து நீத்தவா
அசுரர்குல மழித்த வீரா
கருணைப்ர வாகனே சரணப்ர தாபனே
கானத்து வரு வேடனே
கருதுசசி தேவிமங் கலநாணைக் காத்தங்கு
கடிமணம் செய்த குகனே
முருகசர வணபவா னந்தனே ஸ்ரீவள்ளி
மோகனே கார்த்தி கேயா,
முந்துதமிழ்ப் புலவனை முட்டைக்கும் கானத்தில்
முட்டையென நின்ற முருகா
திரளன்பு பொங்கி வரும் திருவமுத மாகின்ற
செல்வமே தந்தரு ளுவாய்
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப் பதிமேவு
சிங்காரக் கந்த வேளே.

19. ஓராறு முகமாட ஈராறு கரமாட
ஒளிர் மகுட வரிசையாட
உயர்முத்து ரத்நமணி பொன்னிப மலர்மாலை
உற்றவரைத் தோள்க ளாட
பேரான கற்பூர சந்தனகஸ் தூரிமணம்
பெருகு தடமார்பு மாட
பிரகாசக் குழையாட வருசோதிச் சடையாட
பேசுகிண் கிணிக ளாட
ஏராரு மயிலாட ஏன்றடுங் கொடியாட
இருமாதர் ஆட ஆட

இமையவரும் குறவர்களும் எண்டிசை குலுங்கஏழ்
இசைபாடி ஆட ஆட
சீரான வேலாட சிறுமுறுவல் மிகவந்தெம்
தீவினைகள் தீர்த்தருளுவாய்
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப் பதிமேவு
சிங்காரக் கந்த வேளே.

20. சத்திவரும் மெய்ஞ்ஞான தத்துவ சுகம்வரும்
தண்ணருட் செல்வம் வரும்
தாங்குமனச் சாந்திவரும் ஓங்குகலைக் காந்திவரும்
தானமொடு தவமும் வரும்
பத்திவரும் பரயோக புத்திவரும் தன்னையுணர்
பாங்கான பக்குவம் வரும்
பற்றற்ற பண்புவரும் முற்றுற்ற இன்பம்வரும்
பரவுமனப் பதிவும் வரும்
முத்திவரும் மோனநிலைச் சத்துசித் தானந்த
மூர்த்திதரும் கீர்த்தியும் வரும்
மூவாசை தீர்ந்துபுல னொருமித் தமைந்தசுழு
முனைநாடி வினைவும் வரும்
சித்திவரும் சரவண பவாஎன்று நினதுபதம்
தேடியுணர் அடிய வர்க்கே
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப் பதிமேவு
சிங்காரக் கந்த வேளே.

21. நாவார நின்னுமை நாளும் துதித்தோதி
ஞானநெறி பேண அருள்வாய்
நண்ணுமூ வாசையால் எண்ணங் கதிக்காதுன்
நற்பதம் நினைக்க அருள்வாய்

தேவார மாதியாம் திருமுறைப் பொருள்கண்ட
தேனினைப் பருக அருள்வாய்
திருநீறும் அட்சரமும் சிவமணியும் கொண்டுனைச்
சேவிக்கு நேச மருள்வாய்
ஓவாதுன் திருவடியை உள்ளத்தி லேயமைத்
துயர்தவ மியற்ற அருள்வாய்
உள்ளங் குவிந்து கலைவெள்ளம் சுரந்துவாய்
ஓலமிட் டுருக அருள்வாய்
தேவாதி தேவனே சென்மங்க டோறுமுன்
சேவைமற வாமை யருள்வாய்
தெய்வானை வள்ளியொடு நீர்வேலிப்பதி மேவு
சிங்காரக் கந்த வேளே.

## வேறு

22. பொன்பரவும் வதனங்கள் புந்திசாந் தம்செயப்,
புனிதமிகு ஞானவிழிகள்
பொலிகருணை தரநோக்க, வலியபன் னிருகரம்
பொங்குவர மெங்கும்நல்க,
முன்பரவு தண்சடகம் புற்றதிரு மலிமார்பு
முத்திதரு மோனமுதவ,
முந்துகிண் கிணிதண்டை செந்தமிழ் முழங்குகலை
மொழியுமுல கெங்கும்பேச,
மின்பரவு புள்ளிமயில் மேவுதுயர்க் களைநீக்க,
மெய்ச்சேவல் வீரங்கூவ,
வெற்றிவேல் ஞானத்தில் விளைகின்ற சுவைகாட்ட
வீற்றரசு செய்யுமுருகா,
அன்புமது வுண்டுபே ரின்பமலை யேறிநின்
அழகொளியைக் காணஅருள்வாய்
அமுதகுஞ் சரிவள்ளி அணையமணி ரதமேறும்
ஆதிநீர் வைக்கந்தனே.

## ஆசிரியப்பா

23. சீர்பயில் கலையும் செழுநில வளமும்
பார்பயில் நிதியும் பலாமா வாழை
ஊர்வளர் செந்நெல் ஓங்குயாழ்ப் பாண
நீர்வையம் பதியில் நீள்பெருங் கடம்பும்
மதிலும் வீதியும் வான்மகிழ் மணியும்
மதிதோய் கோபுர வரிசையும் மன்னும்
கோயில்கொண் டருளிய குஞ்சரி வள்ளி
நாயகன் கந்தன் ஞானவே லழகன்
திருவருள் சுரக்க, சித்திரத் தேரில்
கருணை மூர்த்தியாய்க் காட்சி தந்தனனே.

அருட்கவி. சீ. விநாசித்தம்பி.
(அளவையூர்ச் சஞ்சீவி)